Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar Case No. **STC.50/2022**

Miscellaneous

Preliminary Register

Deposition of DW-2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சதீஷ்குமார் | Father Name | : | கோதண்டராமன் |
| Village | : | கீழ அமராவதி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஆசிரியர் |
| Religion | : | | Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of October 2025.

புகார்தாரர் ஆஜர். புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**எதிரி தரப்பில் முதல் விசாரணை -**

எனது ஊரை சேர்ந்த ரமேஷ் த/பெ சண்முகம், சின்னையன் த/பெ கருப்பன் என்பவர்களின் மூலமாக இவ்வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும். கடந்த 10.01.2019 ம் தேதி நான் புகார்தாரரிடமிருந்து ரூபாய் 3 லட்சம் கடனாக மாதம் 5 பைசா வட்டி வீதம் வாங்கினேன். மேலும் சில்லரையாக ரூபாய் 65,000/- புகார்தாரரிடமிருந்து வேறுவேறு தினங்களில் கடனாக மாதம் 5 பைசா வட்டிக்கு பெற்றேன். மேற்படி தொகையான ரூ.3,65,000/- க்கு மாதம் ரூ.18,250/- புகார்தாரரிடம் செலுத்தி வந்தேன். நான் 10.01.2019 முதல் 31.12.2019 ம் தேதிவரை மேற்படி தொகைக்கு நான் மேலே குறிப்பிட்ட எனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னையன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள் முன்பு வைத்து வட்டி செலுத்தி வந்தேன். அதன் பின்பு 01.01.2020 முதல் அக்டோபர் 2020 வரை நான் மேற்படி தொகைக்கு புகார்தாரருக்கு வட்டி செலுத்தவில்லை. கடந்த 18.10.2020 அன்று எனக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை எனக்கு வந்ததால் நான் மேற்படி தொகையிலிருந்து ரூ.2,25,000/- ஐ எனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னையன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள் முன்பு வைத்து புகார்தாரரிடம் அசலில் வரவு வைத்துக்கொள்ளுமாறு கொடுத்தேன். நான் கடந்த 28.12.2020 ம் தேதியன்று ரூபாய் 31,500/-ஐ மேற்படி தொகைக்கு வட்டியாக எனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னையன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள்

முன்னிலையில் புகார்தாரரிடம் கொடுத்தேன். அதன்பிறகு புகார்தாரர் என்னிடம் மேற்படி தொகையை வட்டி பாக்கி ரூ.5,000/- இருப்பதாக கூறி என்னிடம தொடர்ந்து கேட்டு வந்தபடியால் நான் ரூ.5,000/- ஐ கடந்த 05.05.2021 அன்று புகார்தாரரிடம் மேற்படி எனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னையன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள் முன்னிலையில் கொடுத்தேன்.அதன் பிறகும் புகார்தாரர் என்னிடம் வட்டி பணம் கேட்டு தொந்தரவு செய்ததால் நான் கடந்த 01.07.2021 அன்று வலங்கைமான் காவல் நிலையத்தில் இது தொடர்பாக புகார் கொடுத்தேன். தொடர்ந்து புகார்தாரர் என்னை மேற்படி அசல் தொகை மற்றம் வட்டியை கேட்டு தொந்தரவு செய்ததால் நான் 431925 என்ற எண்ணுள்ள எனது SBI நீடாமங்களம் கிளை காசோலையை ரூ.3,65,000/-க்கு பூர்த்தி செய்து நான் புகார்தாரரிடமிருந்து பெற்ற அசலுக்கு கொடுத்தேன். நான் 431926 என்ற எண்ணுள்ள எனது SBI நீடாமங்களம் கிளை காசோலையை ரூ.1,90,000/-க்கு பூர்த்தி செய்து நான் புகார்தாரரிடமிருந்து பெற்ற அசலுக்கான வட்டிக்கு கொடுத்தேன். மேலும் மேற்படி காசோலைகளை தவிர்த்து 2 பூர்த்தி செய்யாத காசோலைகளையும் புகார்தாரர் நான் மேற்படி பணத்தினை பெறும்போது என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார். மேற்படி காசோலைகளின் எண்கள் முறையே 431912 மற்றும் 257704 ஆகும். மேலும் மேற்படி தொகைக்கு ஈடாக ஒரு கடனுறுதி பத்திரமும் மேலும் ஒரு வெற்று பத்திரமும் என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டு புகார்தாரர் என்னிடமிருந்து வாங்கிகொண்டார். கடந்த 2022 ம் வருடம் புகார்தாரர் என்னிடமிருந்து மேற்படி தொகையான ரூ.3,65,000/- மற்றும் அதற்கு வட்டி தொகையான ரூ. 1,90,000/-க்கும் சேர்த்து ஒரே பத்திரமாக எழுதித் தரும்படி என்னை வற்புறுத்தியதால் நான் அதற்கு சம்மதித்து ரூ.5,55,000/-க்கு முத்திரை வில்லை ஒட்டப்பட்ட பத்திரத்தில் அவரிடம் எழுதிக்கொடுத்தேன். நான் பெற்ற கடன் தொகைக்கு 1% வீதம் வட்டி தருவதாக புகார் தாரரிடம் வலங்கைமான் காவல் நிலையத்தில் வைத்து கூறினேன். ஆனால் புகார்தாரர் அதற்கு சம்மதிக்கவில்லை. நான் இதுவரை புகார்தாரரிடம் நான் பெற்ற கடனுக்கு ரூ.4,80,500/- ஐ செலுத்தியுள்ளேன். புகார்தாரரால் என்மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு பொய் வழக்காகும் நான் புகார்தாரரிடம் புகார்தாரர் சொல்லியுள்ள தேதியான 2022ம் வருடம் புகார்தாரரிடமிருந்து எந்த பணமும் பெறவில்லை.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., B.Ed., கணிதம் படித்துள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, "நான் 431925 என்ற எண்ணுள்ள எனது SBI நீடாமங்களம் கிளை காசோலையை ரூ.3,65,000/-க்கு பூர்த்தி செய்து நான் புகார்தாரரிடமிருந்து பெற்ற அசலுக்கு கொடுத்தேன்." என்று நான் கூறுவது பு.சா.ஆ.1 காசோலைதான் என்றால் சரிதான். இவ்வழக்கில் மேற்படி காசோலையில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ள வங்கியின் குறிப்பாணைதான் பு.சா.ஆ.2 என்றால் சரிதான். அதற்காக புகார்தாரர் அவரது வழக்கறிஞரின் மூலம் அனுப்பிய அறிவிப்புதான் பு.சா.ஆ.3 என்றால் சரிதான். இவ்வழக்கின் நான் சாட்சிகளாக கூறிய சின்னையயன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ரமேஷ் மற்றும் சின்னையயன் இருவருமே எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள். ஆனால் புகார்தாரரிடம் வேலை பார்க்கிறார்கள். பு.சா.ஆ 6 நான் கொடுத்த பதில் அறிவிப்பு என்றால் சரிதான் அதில் சாட்சி ஹானஸ்ட்ராஜ் என்பவரின் பெயரை கூறவில்லை என்று தானாக கூறுகிறார். ஹானஸ்ட்ராஜ் என்பவர் எனக்கு வேண்டியபட்டவர் என்பதால் அவர்மூலம் நான் நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிப்பதற்கு ஏதுவாக நீதிமன்றத்தில் தற்போது அவர் பெயரை குறிப்பிட்டு திட்டமிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில், " கடந்த 10.01.2019 ம் தேதி நான் புகார்தாரரிடமிருந்து ரூபாய் 3 லட்சம் கடனாக மாதம் 5 பைசா வட்டி வீதம் வாங்கினேன். மேலும் சில்லரையாக ரூபாய் 65,000/- புகார்தாரரிடமிருந்து வேறுவேறு தினங்களில் கடனாக மாதம் 5 பைசா வட்டிக்கு பெற்றேன். மேற்படி தொகையான ரூ.3,65,000/- க்கு மாதம் ரூ.18,250/- புகார்தாரரிடம் செலுத்தி வந்தேன். நான் 10.01.2019 முதல் 31.12.2019 ம் தேதிவரை மேற்படி தொகைக்கு நான் மேலே குறிப்பிட்ட எனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னையயன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள் முன்பு வைத்து வட்டி செலுத்தி வந்தேன்" என்று கூறியுள்ளது இந்த வழக்கிற்காக கூறப்பட்ட பொய் என்றால் சரியல்ல. நான் 15.02.2022 அன்று தான் மேற்படி கடன் தொகையை புகார்தாரரிடமிருந்து பெற்றேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் , " 01.01.2020 முதல் அக்டோபர் 2020 வரை நான் மேற்படி தொகைக்கு புகார்தாரருக்கு வட்டி செலுத்தவில்லை. கடந்த 18.10.2020 அன்று எனக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை எனக்கு வந்ததால் நான் மேற்படி தொகையிலிருந்து ரூ.2,25,000/- ஐ எனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னையயன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள் முன்பு வைத்து புகார்தாரரிடம் அசலில் வரவு

வைத்துக்கொள்ளுமாறு கொடுத்தேன். நான் கடந்த 28.12.2020 ம் தேதியன்று ரூபாய் 31,500/-ஐ மேற்படி தொகைக்கு வட்டியாக எனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னையன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள் முன்னிலையில் புகார்தாரரிடம் கொடுத்தேன். அதன்பிறகு புகார்தாரர் என்னிடம் மேற்படி தொகையை வட்டி பாக்கி ரூ.5,000/- இருப்பதாக கூறி என்னிடம் தொடர்ந்து கேட்டு வந்தபடியால் நான் ரூ.5,000/- ஐ கடந்த 05.05.2021 அன்று புகார்தாரரிடம் மேற்படி எனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னையன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள் முன்னிலையில் கொடுத்தேன்" என்று கூறியுள்ள விபரங்கள் இவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் கூறியுள்ள பொய் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் மேற்கூறிய பல்வேறு தேதிகளில் வட்டி செலுத்தியதாக கூறுவதற்கு புகார்தாரரிடமிருந்து ஏதேனும் கச்சாத்து பெற்றோ ஏதேனும் வங்கியில் செலுத்தியதற்கான வரவுச்சீட்டோ பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ரசீது ஏதும் நான் எனது வசம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் கூறிய மேற்படி சாட்சிகளான சின்னையன், ஹானஸ்ட்ராஜ் மற்றும் ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் பல்வேறு தேதிகளில் வட்டியும் அசலும் கொடுத்ததற்கு அவர்களிடமிருந்து ஏதேனும் கையெழுத்து பெற்று ஏதேனும் ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் கடந்த 01.07.2021 அன்று வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார்தாரர் மீது புகார் கொடுத்ததற்கான புகாரோ மனு ரசீதோ அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கான விபரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் கொடுத்த புகாரினை விசாரணை செய்த உதவி ஆய்வாளர் பணம் சம்பந்தப்பட்ட புகாராக இருப்பதால் புகார் ஏதும் பதிவு செய்ய வேண்டாம் மற்றும் அதற்கு ரசீது ஏதும் வேண்டாம் என்று கூறியதால் நான் கொடுத்த புகாருக்கு ரசீது ஏதும் பெறவில்லை. நான் கூறியுள்ளது பொய்யானது என்றாலும் நான் மேற்கூறியவாறு அதிக வட்டியை புகார்தாரர் என்னிடமிருந்து பெற்றிருந்தால் அது கிரிமினல் குற்றம் ஆகும் என்பதால் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றாலும் மேற்கூறியவாறு பணம் சம்பந்தபட்ட புகார் என்று திருப்பி அனுப்பியிருக்கமாட்டார்கள் என்றாலும் சரியல்ல. எனக்கு கந்துவட்டி தடைசட்டம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார்தாரர்மீது நான் கந்துவட்டிசட்டத்தின்கீழ் ஏதேனும் புகார் காவல் நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்தில் தனிப்புகாராக தாக்கல் செய்து அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கந்துவட்டி

சட்டத்தின் கீழ் புகார் கொடுக்கவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் தனிப்புகார் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் முதல் விசாரணையில், " நான் மேற்படி பணத்தினை பெறும்போது என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார். மேற்படி காசோலைகளின் எண்கள் முறையே 431912 மற்றும் 257704 ஆகும். மேலும் மேற்படி தொகைக்கு ஈடாக ஒரு கடனுறுதி பத்திரமும் மேலும் ஒரு வெற்று பத்திரமும் என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டு புகார்தாரர் என்னிடமிருந்து வாங்கிகொண்டார் " என்று கூறியுள்ளேன். மேற்கூறியவாறு ஆவணங்கள் நான் கொடுத்துள்ளேன் என்றால் தற்சமயம் வழக்கிற்கான காசோலைகள் கொடுத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் அவசியமில்லை ஆனால் புகார் தாரர் என்னிடம் பிரச்சனை செய்ததால் நான் இவ்வழக்கிற்கான காசோலை மற்றும் 431926 என்ற காசோலைகளை கொடுத்தேன். நான் புகார்தாரர் என்னிடம் பிரச்சனை செய்தார் என்று கூறுவதற்கு நான் காவல் நிலையத்தில் ஏதும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது அறிவிப்பான பு.சா.ஆ.6ல் புகார்தாரர் என்னிடம் பிரச்சனை செய்து இவ்வழக்கு காசோலை மற்றும் 431926 என்ற காசோலைகளை வாங்கினார் என்று நான் கூறியுள்ளேனா என்றால் இல்லை. பிரச்சனை என்ற வார்த்தை அதில் இல்லை. மேற்படி நான் கூறியதுபோல் புகார்தாரர் என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. (நேரமின்மை மற்றும் மின்தடை காரணமாக புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு புகார்தாரரின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.10 11:23:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.